காங்கயம் நகராட்சி
மன்றக்கூட்டத்தாள்

நிகழும் சார்வரி வருடம் தமிழ் மாதம் ஐப்பசி 06–ஆம் நாள் ஆங்கில வருடம் 2020 அக்டோபர் 22– ஆம் தேதி வியாழன் கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.

**மன்றப்பொருள்:1**

ந.க.எண்.997/2020/அ2

2020–2021 ஆம் ஆண்டிற்கான குத்தகைதாரர்களுடைய வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகையாக 2016–2017 ஆம் ஆண்டு வரை கொண்டு செல்லப்பட்டுள்ளது. கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள குத்தகைதாரர்கள் செலுத்திய வைப்பு தொகையினை திரும்பி தருமாறு விண்ணப்பித்துள்ளனர்.

| வரிசை எண் | குத்தகைதாரர் பெயர் | கடை விபரம் | வருடம் | பதிவேடு பக்கம் எண் | பதிவேடு வரிசை எண் | இருப்பில் உள்ள வைப்பு தொகை | தொழில் வரி ஈடு செய்யப்படும் தொகை | திரும்ப வழங்கும் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | எஸ்.விஸ்வநாதன் | தினசரி மார்க்கெட் தெற்கு பார்த்த கடை எண்.4 | 2008–2009<br>2008–2009<br>2011–2012 | 11<br>11<br>15 | 20<br>21<br>6 | 15000<br>5000<br>2712 | 0<br>0<br>0 | 15000<br>5000<br>2712 |
| 2 | விமலா | ஆவின் பாலகம் | 2011–2012<br>2012–2013 | 18<br>23 | 52<br>13 | 3000<br>9240 | 0<br>0 | 3000<br>9240 |
| 3 | எம்.நடராஜன் | பழைய பேருந்து நிலைய கடை எண் 15 | 2013–2014<br>2013–2014 | 27<br>27 | 49<br>50 | 12386<br>10000 | 3550<br>0 | 8836<br>10000 |

மேற்படி குத்தகைதாரர்களின் இருப்பில் உள்ள காலங்கடந்த வைப்பு தொகையிலிருந்து குத்தகைதாரர்கள் செலுத்தவேண்டிய தொழில் வரி தொகையினை பிடித்தம் செய்து கொண்டு மீதத் தொகையினை பொது நிதியிலிருந்து திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1683. நாள்.22.10.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

மன்றப்பொருள்:2

கோப்புஎண்.755/2016/அ2

காங்கயம் நகாட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையக் கடை எண்.11,12,21,24,27,31, மற்றும் 20A–க்கு 09.10.2020 அன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் கடை எண்.11, மற்றும் 12–க்கு ஒப்பந்தப்புள்ளி கீழ்கண்டவாறு கோரப்பட்டுள்ளது.

| வ. எண் | ஏலம் கோரியவர்கள்விபரம் | பழைய பேருந்து நிலையக் கடை எண்கள் | ஒப்பந்தபுள்ளிெ தாகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | திருமதி.சண்முக தேவி<br>சோழன் நகர்,<br>காங்கயம். | பழையபேருந்து நிலையக் கடை எண் 12 | 10,580/– |
| 2. | திரு.S.ராஜா,<br>சுபாஷ் வீதி,<br>காங்கயம் | பழையபேருந்து நிலையக் கடை எண் 11 | 6500/– |

மேற்கண்டவாறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கடை எண் 11–க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக திரு.ராஜா என்பவரும் கடை எண் 12–க்கு திருமதி.சண்முகதேவி என்பவரும் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி கடையின் பழைய வாடகை கூடுதலாக இருப்பதாலும், மேலும் கூடுதல் ஏலம் போக வாய்ப்புள்ளது என்பதாலும் மறு ஏலம் விட மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1684 . நாள்.22.10.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

மன்றப்பொருள்:3

ந.க.எண் : 358/2013/அ2

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்டுள்ள குத்தகை இனங்களுக்கு 09.10.2020 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் எவரும் ஏலம் கேட்க முன்வரவில்லை, எனவே மறுஏலம் விட மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண். | ஏலம் விடப்பட வேண்டிய கடைகள் | கடை எண்கள் |
|---|---|---|
| 1. | தாட்கோ வணிக வளாகக் கடை எண் | 2,3,4,5,6 மற்றும் 8,9 |
| 2. | பழையப்பேருந்து நிலையக் கடை எண் | 11,12,21,24,27,28,31 மற்றும் 20A |
| 3. | தினசரி மார்க்கெட் வடக்குப் பார்த்த கடை எண் | 11,17,18 |
| 4. | தினசரி மார்க்கெட் தெற்கு பார்த்த கடை எண் | 6,14,15,17,18 |
| 5. | சென்னிமலை ரோடு பூக்கடை எண் | 1,3 |
| 6. | நகரப்பேருந்து நிலையக் கடை எண் | 21 |

<u>அலுவலகக் குறிப்பு:–</u>

22.10.2020 அன்று மறுஏலம் விட மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1685 . நாள்.22.10.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:4**

**கோப்புஎண்.2072/2016/அ2**

காங்கயம் நகாட்சிக்கு சொந்தமான தினசரி மார்க்கெட் வடக்கு பார்த்த கடை எண்.3,11,17,18, மற்றும் தெற்கு பார்த்த கடை எண் 6,14,15,17,18 மற்றும் சென்னிமலை ரோடு பூக்கடை எண்–1 மற்றும் 3– ஆகிய கடைகளுக்கு09.10.2020 அன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் கீழ்கண்டவாறு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

| வ. எண் | ஏலம் கோரியவர்கள்விபரம் | குத்தகை இனம் | கடை எண் | ஏலக்கேள்வி தொகை (ரூ) | ஒப்பந்தபுள்ளி தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|
| 1. | திரு.அன்பழகன்,39/70அய்யாசாமி நகர் காலனி,காங்கயம். | தினசரி மார்க்கெட் வடக்கு பார்த்த கடைகள் | 3 | ரூ.7200/– | ரூ.3200/– |
| 2. | திரு. நடராஜ் புலிக்கல் மேடு,காங்கயம். | | 3 | ரூ.7300/– | ரூ.6500/– |
| 3. | திரு. முகமது முக்தர், 23, பெருமாள் கோவில் வீதி, காங்கயம். | | 3 | ரூ.5500/– | ரூ.5100/– |
| 4. | திரு.அன்பழகன்,39/70அய்யாசாமி நகர் காலனி,காங்கயம். | | 11 | ரூ.6200/– | ரூ.3100/– |
| 5. | திரு. ஷேக் முகமது, 111, திருவள்ளுவர் வீதி, காங்கயம். | | 11 | ரூ.6100/– | ரூ.5000/– |
| 6. | திரு. ராஜூ, 6/282–1, முள்ளவாடிபாளையம், முள்ளிபுரம். | | 17 | – | ரூ.7000/– |
| 7. | திரு. மோகன்ராஜ், 1, காந்திஜி ரோடு, சிவகிரி. | | 18 | – | ரூ.3006/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8. | திரு.கந்தசாமி,14,பெரியகாளியப்ப கவுண்டன் வலசு, காங்கயம். | தினசரி மார்க்கெட் தெற்கு பார்த்த கடை | 14 | – | ரூ.4800/– |
| 9. | திரு. P.ராஜேஷ், 1, களிமேடு, காங்கயம். | பூக்கடை | 3 | – | ரூ.6325/– |

மேற்கண்டவாறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கடை எண் 3–க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகையாக திரு.நடராஜ்என்பவர் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. கடை எண் 3–க்கு ஏற்கனவே உள்ள வாடகைத்தொகையை விட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளமையால் திரு.நடராஜ் அவர்களின் ஏலத்தொகையை ஏற்று கடையினை வாடகைக்கு விட மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி கடைஎண்கள் 11,17,18, மற்றும் தெற்கு பார்த்த கடை 14 மற்றும் பூக்கடை 3 ஆகிய கடைகளின் பழைய வாடகை கூடுதலாக இருப்பதாலும், மேலும் கூடுதல் ஏலம் போக வாய்ப்புள்ளது என்பதாலும் மறு ஏலம் விட மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1686 . நாள்.22.10.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:5**

**கோப்பு எண். 1360/ 2020/ அ1**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின் கடிதம் எண் 564/2020/அ2, நாள் 28.10.2020, –இல் காங்கயம் நகராட்சியில் மக்கள் சாசனம் தயார் செய்து நகர் மன்றத்தின் ஒப்புதல் பெற்று அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டதிற்கிணங்க காங்கயம் நகராட்சியில் தயார் செய்யப்பட்ட மக்கள் சாசனம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

<u>அலுவலகக் குறிப்பு</u>

காங்கயம் நகராட்சியில் 2020–2021–ம் ஆண்டு தயார் செய்யப்பட்டுள்ள மக்கள் சாசனத்தினை பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1687 . நாள்.22.10.2020**
**தீர்மானம்:** பதிவு செய்யப்பட்டது.

**மன்றப்பொருள்:6**

**கோப்பு எண். 857 / 2019/ எப்1**

திருப்பூர் மாவட்டம் காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம் ரீ.சர்வே எண். 840/1A3 -ல் 1.32 ½ ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி வேண்டி திரு. டி. நல்லசிவம் த/பெ. துரைசாமி என்பவர் 18.06.2019 அன்று விண்ணப்பித்தார். மேற்படி விண்ணப்பம் இவ்வலுவலக கடித ந.க எண் 857/2019/எப்1 நாள். 21.06.2019 –ன் வாயிலாக உரிய அனுமதி வேண்டி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்கண்ட மனுதாரரின் உத்தேசத்தை பரிசீலனை செய்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை, திருப்பூர் அவர்களின் கடித ந.க எண் 9512019/திம1 நாள். 22.08.2019–ல் குடியிருப்பு மனைப்பிரிவின் பொது உபயோகம், மின் பகிர்மானத்திற்கு

ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் மற்றும் உத்தேச சாலைகளுக்கான அமைப்பு வரைபடம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அடிப்படை வசதிகள் செய்து உள்ளாட்சிக்கு ஒப்படைக்கவும், மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள TANGEDCO –ற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தினை தானபத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டதற்கான விபரம் மற்றும் அடிப்படை வசதிகள் தரமாக செய்யப்பட்டுள்ளது என்று நகராட்சி பொறியாளரின் சான்றுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கிணங்க நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிக்கை கோரப்பட்டது. மேலும் மேற்கண்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி 1920–ம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 175,176,177,178 மற்றும் 179, மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன் விதி 47(11) –ன் படி அடிப்படை வசதிகள் செய்து தான ஆவணம் மூலம் நகராட்சிக்கு ஒப்படைக்குமாறு மனைப்பிரிவுதாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது.

நகராட்சி பொறியாளர் தனது 11.02.2020 –ம் தேதிய மனுவில் ரீ. சர்வே எண் **840/1**A3 -ல் **1.32** ½ ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் மனைப்பிரிவில் சாலைகள், வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளன என தெரிவித்து, மேல் நடவடிக்கைக்கு அனுப்புமாறு கேட்டுக்கொண்டார். நகராட்சி பெபறியாளர் தனது **16.03.2020**–ம் தேதிய அறிக்கையில் மேற்படி மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள தார்சாலைகள் மற்றும் வடிகால்கள் பயன்பாட்டிற்கு ஏற்புடையதாக
உள்ளது என்றும் சான்று வழங்கியுள்ளார்.

மின்பகிர்மானத்திற்கு (TANGEDCO) ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் காங்கயம் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண் **5686/2019**, நாள். **15.11.2019** –ன் மூலம் மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், பல்லடம் மின் பகிர்மான வட்டம் அவர்களுக்கு தானபத்திரம் வாயிலாக மனைப்பிரிவுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. காங்கயம் நகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய சாலைகள் மற்றும் பொது உபயோகத்திற்கான இடம் ஆகியவை காங்கயம் சார் பதிவாளர் அலுவலக ஆவணம் எண் **1796/2020** நாள் **20.05.2020**–ன் மூலம் ஆணையாளர், காங்கயம் நகராட்சி அவர்களுக்கு தானபத்திரம் வாயிலாக மனைப்பிரிவுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

காங்கயம் நகர்மன்ற தீர்மானம் எண் **1564**, நாள்.**30.03.2020** –ல் மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகளின் பரப்பு **1070.60** சதுர மீட்டர் பரப்பளவு இடம் ஆகியவற்றை பெற மன்றம் ஏற்கலாம் எனவும், தெருவிளக்குகள் அமைக்க ரூ.2,20,000/– ஐ இந்நகராட்சிக்கு கருவூலத்தில் செலுத்த அறிவிப்பு வழங்கலாம் எனவும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தெருவிளக்குகள் அமைப்பதற்காக நகராட்சி பொறியாளர் அவர்களால் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.**2,20,000/–** பற்றுச்சீட்டு எண் 158/158/03/20-21/0000997, நாள். 21.05.2020–ல் நகராட்சி கருவூலத்தில் மனைப்பிரிவுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட தொடர் நடவடிக்கைகளைத் தொடர்ந்து காங்கயம் நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட ஆவணம் நகல், இந்நகர்மன்ற தீர்மானம் நகல், நகராட்சி பொறியாளர் சான்று மற்றும் தெருவிளக்குகள் அமைக்க செலுத்தப்பட்ட தொகைக்கான இரசீது நகல் ஆகியவற்றை இணைத்து இவ்வலுவலக கடிதம் ந.க எண் 857/2019/எப்1, நாள்: 21.05.2020–ன் வாயிலாக மேல் நடவடிக்கைகாக நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் மண்டலம், திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் மண்டலம் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க எண். 951/2019/திம1 நாள். 25.06.2020–ல் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கு ம.வ/ந.ஊ (திமா) எண் **103/2020** என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் செலுத்த வேண்டிய தொகைக்கான கேட்பு இவ்வலுவலக அறிவிப்பு ந.க எண் 857/2019/எப்1,, நாள்: 21.08.2020–ன் வாயிலாக மனைப்பிரிவுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, **1.** கூர்ந்தாய்வுக் கட்டணம் – ரூ.**8045/–**, 2. மனைப்பிரிவு அங்கீகார கட்டணம் – **ரூ.** 20000/-, 3. அபிவிருத்திக் கட்டணம் 32178/- (மொத்தம் ரூ. **60,223/–)** மற்றும் காலிமனை வரிக்கான தோராய தொகை ரூ.9980/ ஆகியவை முறையே பற்றுச்சீட்டு எண் 158/03/20-21/0003916 மற்றும் 158/03/20-21/0003917 நாள் 25.08.2020 –ன் வாயிலாக நகராட்சி கருவூலத்தில் மனைப்பிரிவுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. அரசாணை எண்.79, வீட்டு வசதி வாரியம் மற்றும் நகர்ப்புறவளர்ச்சி (நவ 4(3)) துறை, நாள் 04.05.2017 –ன் படி நிலப்பயன்மாற்ற கட்டணமாக ரூ.47,733/– காங்கயம் சார் நிலைக் கருவூலத்தில் செலுத்துச் சீட்டு எண்.**003**, நாள். 25.08.2020 மற்றும் ரூ.**69,000/–** காங்கயம் சார் நிலைக் கருவூலத்தில் செலுத்துச் சீட்டு எண்.**026**, நாள். 16.10.2020 (ஆக மொத்தம் நிலப்பயன்மாற்ற கட்டணமாக ரூ. **1,16,733/–)** வாயிலாக மனைப்பிரிவுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு ஆகியவை காங்கயம் வட்டாட்சியர் அவர்களின் நடவடிக்கைகள் உத்திரவு டி.ஆர்.எண் 2020/32/05/000273SD, நாள். 30.09.2020–ன் படி புல எண் **840/1**A3A என ஆணையாளர், காங்கயம் நகராட்சி என்ற பெயரில் புதிய உட்பிரிவுகள் மேற்கொள்ளப்பட்டு, பட்டா எண் 13768 என எண்ணிடப்பட்டு பட்டா மாறுதல் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. திரு. டி. நல்லசிவம் தனது **07.09.2020** ஆம் தேதிய மனுவில் செலுத்த வேண்டிய அனைத்து தொகையையும் செலுத்தி விட்டதாகவும் எனவே மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே, காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம் ரீ. சர்வே எண் **840/1**A3 பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1688 . நாள்.22.10.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:7**

**கோப்பு எண். 1707 / 2019/ எப்1**

திருப்பூர் மாவட்டம் காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம் ரீ.சர்வே எண். **68/1** A -ல் **1.75** ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி வேண்டி **1.** திரு. டி. நல்லசிவம் த/பெ. துரைசாமி, **2.** திரு.பி.பி. சண்முகசுந்தரம் த/பெ. பி. கே. பாலுச்சாமி ஆகியோர் **03.12.2019** அன்று விண்ணப்பித்தார். மேற்படி விண்ணப்பம் இவ்வலுவலக கடித ந.க எண் 1707/2019/எப்1 நாள். 20.12.2019 –ன் வாயிலாக உரிய அனுமதி வேண்டி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்கண்ட மனுதாரரின் உத்தேசத்தை பரிசீலனை செய்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை, திருப்பூர் அவர்களின் கடித ந.க எண் 3348/2019/திம1 நாள். 17.06.2020–ல் குடியிருப்பு மனைப்பிரிவின் பொது உபயோகம், மின் பகிர்மானத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் மற்றும் உத்தேச சாலைகளுக்கான அமைப்பு வரைபடம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அடிப்படை வசதிகள் செய்து உள்ளாட்சிக்கு ஒப்படைக்கவும்,

மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள TANGEDCO –ற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தினை தானபத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டதற்கான விபரம் மற்றும் அடிப்படை வசதிகள் தரமாக செய்யப்பட்டுள்ளது என்று நகராட்சி பொறியாளரின் சான்றுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கிணங்க நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிக்கை கோரப்பட்டது. மேலும் மேற்கண்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி 1920–ம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 175,176,177,178 மற்றும் 179, மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன் விதி 47(11) –ன் படி அடிப்படை வசதிகள் செய்து தான ஆவணம் மூலம் நகராட்சிக்கு ஒப்படைக்குமாறு மனைப்பிரிவுதாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது.

நகராட்சி பொறியாளர் தனது 20.07.2020 –ம் தேதிய அறிக்கையில் மேற்படி மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள தார்சாலைகள் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் நல்ல நிலையில் உள்ளது என்றும், மழைநீர் வடிகால், சிறுபாலம் அமைக்கப்பட்டுள்ளது என்றும் சான்று வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு மின்பகிர்மானத்திற்கு (TANGEDCO) ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் மற்றும் சாலைகள், பொது ஒதுக்கீடு இடம் ஆகியவை காங்கயம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் **2848/2020** நாள் **22.07.2020** –ன் வாயிலாக தானபத்திரம் மூலம் மனைப்பிரிவுதாரர்களால் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

காங்கயம் நகர்மன்ற தீர்மானம் எண் **1639**, நாள்.**29.07.2020** –ல் மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகள் (மூலை முடக்கு உட்பட), பொது ஒதுக்கீட்டிற்கான இடம் மற்றும் மின்பகிர்மானத்திற்காக ஒதுக்கப்பட்ட இடம் ஆகியவற்றை தானமாக பெற மன்றம் ஏற்கலாம் எனவும், தெருவிளக்குகள் அமைக்க ரூ.1,40,000/– ஐ இந்நகராட்சிக்கு கரூவூலத்தில் செலுத்த அறிவிப்பு வழங்கலாம் எனவும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தெருவிளக்குகள் அமைப்பதற்காக நகராட்சி பொறியாளர் அவர்களால் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.**1,40,000/–** பற்றுச்சீட்டு எண் 158/158/03/20-21/0003325, நாள். 04.08.2020–ல் நகராட்சி கரூவூலத்தில் மனைப்பிரிவுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட தொடர் நடவடிக்கைகளைத் தொடர்ந்து காங்கயம் நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட ஆவணம் நகல், இந்நகர்மன்ற தீர்மானம் நகல், நகராட்சி பொறியாளர் சான்று மற்றும் தெருவிளக்குகள் அமைக்க செலுத்தப்பட்ட தொகைக்கான இரசீது நகல் ஆகியவற்றை இணைத்து இவ்வலுவலக கடிதம் ந.க எண் 1707/2019/எப்1, நாள்: 30.07.2020–ன் வாயிலாக மேல் நடவடிக்கைகாக நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் மண்டலம், திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் மண்டலம் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க எண். 3348/2019/திமா நாள். 10.09.2020–ல் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கு ம.வ/ந.ஊ (திமா) எண் **154/2020** என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் செலுத்த வேண்டிய தொகைக்கான கேட்பு இவ்வலுவலக அறிவிப்பு ந.க எண். 1707/2019/எப்1, நாள்:13.10.2020–ன் வாயிலாக மனைப்பிரிவுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, **1.** கூர்ந்தாய்வுக் கட்டணம் – ரூ.**10580/–**, 2. மனைப்பிரிவு அங்கீகார கட்டணம் – ரூ.20000/-, 3. அபிவிருத்திக் கட்டணம் 42320/- (மொத்தம் ரூ.**72900/–)** மற்றும் காலிமனை வரிக்கான தோராய தொகை ரூ.37050/ ஆகியவை முறையே பற்றுச்சீட்டு எண் 158/03/20-21/0007556 மற்றும் 158/03/20-21/0007557 நாள் 15.10.2020 –ன் வாயிலாக நகராட்சி கரூவூலத்தில் மனைப்பிரிவுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. அரசாணை எண்.79, வீட்டு வசதி வாரியம் மற்றும் நகர்ப்புறவளர்ச்சி (நவ 4(3)) துறை, நாள் 04.05.2017 –ன் படி நிலப்பயன்மாற்ற கட்டணமாக ரூ.2,10,000/– காங்கயம் சார் நிலைக் கரூவூலத்தில்

செலுத்துச் சீட்டு எண்.027, நாள். 16.10.2020–ன் வாயிலாக மனைப்பிரிவுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு ஆகியவை காங்கயம் வட்டாட்சியர் அவர்களின் நடவடிக்கைகள் உத்திரவு டி.ஆர்.எண் 2020/32/05/000286SD, நாள். 20.10.2020–ன் படி புல எண் 68/1A3 என ஆணையாளர், காங்கயம் நகராட்சி என்ற பெயரில் புதிய உட்பிரிவுகள் மேற்கொள்ளப்பட்டு, பட்டா எண் 13814 என எண்ணிடப்பட்டு பட்டா மாறுதல் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. மனுதாரர் 1. திரு. டி. நல்லசிவம் த/பெ. துரைசாமி, 2. திரு.பி.பி. சண்முகசுந்தரம் த/பெ. பி. கே. பாலுச்சாமி ஆகியோர் தங்களது 21.10.2020 ஆம் தேதிய மனுவில் செலுத்த வேண்டிய அனைத்து தொகையையும் செலுத்தி விட்டதாகவும் எனவே மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே, காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம் ரீ. சர்வே எண் 68/1A–ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1689 . நாள்.22.10.2020**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

(ஒ.ம்)XXXXX
திருமதி.பா.தேவிகா
ஆணையாளர்
மற்றும் தனி அலுவலர்
காங்கயம் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையாளர்
காங்கயம் நகராட்சி

**காங்கயம் நகராட்சி**
**மன்றக்கூட்டத்தாள்**

**நிகழும் சார்வரி வருடம் தமிழ் மாதம் ஐப்பசி 13–ஆம் நாள் ஆங்கில வருடம் 2020 அக்டோபர் 29– ஆம் தேதி வியாழன் கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**மன்றப்பொருள்: 1** **கோப்பு எண் : 0618 /2020 /இ1**

காங்கயம் நகராட்சி ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2020–2021–.ன் கீழ் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 அய்யாச்சாமி நகர் காலணி கிழக்கு குறுக்கு வீதி மற்றும் மேற்கு 5வது வீதி, வார்டு எண் 9 திரு செந்தில் நகர் மெயின் வீதி வார்டு எண் 10 சக்தி நகர் 1,3 மற்றும் 5 மெயின் மற்றும் குறுக்கு வீதிகளில் தார் சாலை அமைத்தல் பணிக்கு 21.10.2020–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1) | M/s.சபரி கன்ஸ்ட்க்ஷன் |
| 2) | M/s.அஸ்விகா கன்ஸ்ட்க்ஷன் |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப உறை (Technical Bid) அன்றே திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பரிசீலனை செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப உறைகளும் தகுதி வாய்ந்ததாக இருந்தது. இதன்படி 26.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகளின் விலைவிகிதம் ( price pid ) திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்கண்டுள்ள விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | M/s.சபரி கன்ஸ்ட்க்ஷன் | 4.94% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2) | M/s.அஸ்விகா கன்ஸ்ட்க்ஷன் | 5.80% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரர் M/s.சபரி கன்ஸ்ட்க்ஷன் அவர்கள் மதிப்பீட்டை விட அதிக விலை விகிதம் கொடுத்துள்ளதால், ஒப்பந்தப்புள்ளி விதிகளின் படி விலைகுறைப்பு செய்து தரக்கோரி M/s.சபரி கன்ஸ்ட்க்ஷன் அவர்களுக்கு இவ்வலுவலக கடித எண்.00618/ 2020 / இ1, நாள். 26.10.2020–.ன் மூலம் கோரப்பட்டது. ஒப்பந்ததாரர் தற்போது பணியாளர்களின் ஊதிய உயர்வு மற்றும் கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு அதிகமாக இருப்பதால் மேற்படி பணிக்கான விலைவிகிதத்தை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே, மேற்படி, 4.94% கூடுதல் விலைவிகிதத்தில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுடுகறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதாலும் குறிப்பிட்ட காலத்தில் பணி முடிக்கப்பட வேண்டியுள்ளதாலும், பொதுமக்கள் நலன் கருதியும் M/s.சபரி கன்ஸ்ட்க்ஷன்அவர்களின் 4.94% மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்
2. கூடுதல் சதவிகிதம் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதால் ஏற்படும் மதிப்பீட்டைவிட கூடுதல் செலவின தொகையான ரூ.80,647/– நகராட்சியின் பொதுநிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1690 . நாள்.29.10.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:2**

**கோப்பு எண் : 1139/2020/இ1**

காங்கயம் நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அறையில் டைல்ஸ், கதவுகள் முதலியவை பழுதடைந்துள்ளது. ஜெனரேட்டரில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, இந்த பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது . மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.**2.00** இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1691 . நாள்.29.10.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:3**

**கோப்பு எண் : 1138/2020/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சென்னிமலை ரோட்டில் அமைக்கப்பட்டுள்ள FSTP – அமைப்பின் அருகில் உரக்கிடங்கு உள்ளது. உரக்கிடங்கிலிருந்து பாலிதீன் காகிதம் முதலியவை காற்றில் பறந்து FSTP – வளாகத்தில் விழுகிறது. இதனை தடுக்கும் பொருட்டும், மாசு கட்டுப்பாட்டு வாரியத்திடம் அனுமதி பெறவும் FSTP வளாகத்தை சுற்றி Compound அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.**10.00** இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1692 . நாள்.29.10.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:4**

**கோப்பு எண். 1417 / 2019/ எப்1**

திருப்பூர் மாவட்டம் காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம் ரீ.சர்வே எண். **833**/1A2, 833/2B மற்றும் 834/1B2 -ல் **2.11** ½ ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி வேண்டி திரு. எஸ். குமரேசன் (உரிமையாளர்) ,த/பெ வி.எஸ். சுப்பிரமணி, ஆதித்யா ஹவுசிங் & ரியல்டார்ஸ் என்பவர் **27.09.2019** அன்று விண்ணப்பித்தார். மேற்படி விண்ணப்பம் இவ்வலுவலக கடித ந.க எண் 1707/2019/எப்1 நாள். 09.10.2019 –ன் வாயிலாக உரிய அனுமதி வேண்டி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்கண்ட மனுதாரரின் உத்தேசத்தை பரிசீலனை செய்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை, திருப்பூர் அவர்களின் கடித ந.க எண் 1850/2019/திம2 நாள். 19.06.2020–ல் குடியிருப்பு மனைப்பிரிவின் பொது உபயோகம், மின்

பகிர்மானத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் மற்றும் உத்தேச சாலைகளுக்கான அமைப்பு வரைபடம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அடிப்படை வசதிகள் செய்து உள்ளாட்சிக்கு ஒப்படைக்கவும், மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள TANGEDCO –ற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தினை தானபத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டதற்கான விபரம் மற்றும் அடிப்படை வசதிகள் தரமாக செய்யப்பட்டுள்ளது என்று நகராட்சி பொறியாளரின் சான்றுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கிணங்க நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிக்கை கோரப்பட்டது. மேலும் மேற்கண்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி 1920–ம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 175,176,177,178 மற்றும் 179, மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன் விதி 47(11) –ன் படி அடிப்படை வசதிகள் செய்து தான ஆவணம் மூலம் நகராட்சிக்கு ஒப்படைக்குமாறு மனைப்பிரிவுதாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது.

நகராட்சி பொறியாளர் தனது 20.07.2020 –ம் தேதிய அறிக்கையில் மேற்படி மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள தார்சாலைகள் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் நல்ல நிலையில் உள்ளது என்றும், மழைநீர் வடிகால், சிறுபாலம் அமைக்கப்பட்டுள்ளது என்றும் சான்று வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு மின்பகிர்மானத்திற்கு (TANGEDCO) ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் மற்றும் சாலைகள், பொது ஒதுக்கீடு இடம் ஆகியவை காங்கயம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் **2872/2020** நாள் **23.07.2020** –ன் வாயிலாக தானபத்திரம் மூலம் மனைப்பிரிவுதாரரால் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

காங்கயம் நகர்மன்ற தீர்மானம் எண் **1638**, நாள்.**29.07.2020** –ல் மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகள் (மூலை முடக்கு உட்பட), பொது ஒதுக்கீட்டிற்கான இடம் மற்றும் மின்பகிர்மானத்திற்காக ஒதுக்கப்பட்ட இடம் ஆகியவற்றை தானமாக பெற மன்றம் ஏற்கலாம் எனவும், தெருவிளக்குகள் அமைக்க ரூ.1,40,000/– ஐ இந்நகராட்சிக்கு கரூவூலத்தில் செலுத்த அறிவிப்பு வழங்கலாம் எனவும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தெருவிளக்குகள் அமைப்பதற்காக நகராட்சி பொறியாளர் அவர்களால் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.**1,40,000/–** பற்றுச்சீட்டு எண் 158/158/03/20-21/0003324, நாள். 04.08.2020–ல் நகராட்சி கரூவூலத்தில் மனைப்பிரிவுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட தொடர் நடவடிக்கைகளைத் தொடர்ந்து காங்கயம் நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட ஆவணம் நகல், இந்நகர்மன்ற தீர்மானம் நகல், நகராட்சி பொறியாளர் சான்று மற்றும் தெருவிளக்குகள் அமைக்க செலுத்தப்பட்ட தொகைக்கான இரசீது நகல் ஆகியவற்றை இணைத்து இவ்வலுவலக கடிதம் ந.க எண் 1417/2019/எப்1, நாள்: 30.07.2020–ன் வாயிலாக மேல் நடவடிக்கைகாக நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் மண்டலம், திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் மண்டலம் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க எண். 1850/2019/திமா நாள். 10.09.2020–ல் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கு ம.வ/ந.ஊ (திமா) எண் **152/2020** என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் செலுத்த வேண்டிய தொகைக்கான கேட்பு இவ்வலுவலக அறிவிப்பு ந.க எண் 1417/2019/எப்1, நாள்: 13.10.2020–ன் வாயிலாக மனைப்பிரிவுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, **1.** கூர்ந்தாய்வுக் கட்டணம் – ரூ.**12850/–**, 2. மனைப்பிரிவு அங்கீகார கட்டணம் – **ரூ.** 30000/-, 3. அபிவிருத்திக் கட்டணம் 53370/- அரசாணை எண் **79** வீட்டு வசதி வாரியம் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ **4(3)** துறை நாள் **04.05.2017**–ன் படி நிலப்பயன்மாற்ற பரிசீலனைக் கட்டணமாக ரூ.**1000/–** (மொத்தம் ரூ. **97220/–**) மற்றும் காலிமனை வரிக்கான தோராய தொகை ரூ.15730/ ஆகியவை முறையே பற்றுச்சீட்டு எண் 158/03/20-21/0007558 மற்றும் 158/03/20-21/0007559 நாள் 15.10.2020 –ன் வாயிலாக

நகராட்சி கருவூலத்தில் மனைப்பிரிவுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. அரசாணை எண்.79, வீட்டு வசதி வாரியம் மற்றும் நகர்ப்புறவளர்ச்சி (நவ 4(3)) துறை, நாள் 04.05.2017 –ன் படி நிலப்பயன்மாற்ற கட்டணமாக ரூ.1,60,000/– காங்கயம் சார் நிலைக் கருவூலத்தில் செலுத்துச் சீட்டு எண்.**027**, நாள். 16.10.2020–ன் வாயிலாக மனைப்பிரிவுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு ஆகியவை காங்கயம் வட்டாட்சியர் அவர்களின் நடவடிக்கைகள் உத்திரவு டி.ஆர்.எண் 2020/32/05/000287SD, நாள். 23.10.2020–ன் படி புல எண் **833/1**A2B, 834/1B2B மற்றும் 834/1B2F என ஆணையாளர், காங்கயம் நகராட்சி என்ற பெயரில் புதிய உட்பிரிவுகள் மேற்கொள்ளப்பட்டு, பட்டா எண் 13817 என எண்ணிடப்பட்டு பட்டா மாறுதல் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. மனுதாரர் திரு. எஸ். குமரேசன் (உரிமையாளர்) , த/பெ வி. எஸ். சுப்பிரமணி, ஆதித்யா ஹவுசிங் & ரியல்டார்ஸ் என்பவர் தனது **27.10.2020** ஆம் தேதிய மனுவில் செலுத்த வேண்டிய அனைத்து தொகையையும் செலுத்தி விட்டதாகவும் எனவே மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே, காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம் ரீ. சர்வே எண் **833/1**A2, 833/2B மற்றும் 834/1B2 –**2.11** ½ ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண். 1693 . நாள்.29.10.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

(ஒ.ம்)XXXXX
திருமதி.பா.தேவிகா
ஆணையாளர்
மற்றும் தனி அலுவலர்
காங்கயம் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையாளர்
காங்கயம் நகராட்சி